சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம்– திரு நா.வினோத்குமார், (த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு மா.நாராயணன்)– கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண். 56

நாள் : 10.09.2020
சார்வரி, ஆவணி 25
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கடிதங்கள் எண். அ2/10330/2019(12382), நாள் 31.12.2019 மற்றும் 30.05.2020.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.

-----

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித் துறையைச் சார்ந்த, காரைக்குடி, நிலநீர் கோட்டத்தின் கீழ் உள்ள விருதுநகர் நிலவியல் உபகோட்டத்தில் உதவியாள் தரம்–1 ஆகப் பணிபுரிந்து வந்த திரு.மா.நாராயணன் பணியிலிருக்கும் போது 27.09.2009 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது மனைவி திருமதி என்.வனஜா, அவர்களது வாரிசுதாரரும்/ இரண்டாவது மகனுமான திரு. நா.வினோத்குமாருக்கு கருணை அடிப்படையில் பொதுப்பணித் துறையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்குமாறு 09.12.2009 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார் என்றும், அவ்விண்ணப்பம் ஏற்கப்பட்டு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் அளிக்கப்பட்டு, மதுரை, பெரியாறு வைகை வடிநில வட்டத்தின் கீழ் இயங்கும் தேனி, 18ம் கால்வாய் நீட்டிப்பு சிறப்பு கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள, தேனி, 18ம் கால்வாய் நீட்டிப்பு சிறப்பு உபகோட்ட அலுவலகத்தில் 31.08.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரது பிறந்த நாள் 08.06.1991 என்றும், பத்தாம் வகுப்பு தேர்வினை மார்ச் 2006–இல் நிறைவு செய்துள்ளார் என்று தெரிவித்து, பணிவரன்முறைக்கு தேவைப்படுகின்ற சான்றிதழ் / சான்றாவணங்களை அனுப்பி வைத்து அவரது பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 31.08.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையினை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம் அரசைச் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

(த.பி.பா.)

3. கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ.1)துறை, நாள் 23.01.2020–இல் ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

4. மேலே தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. திரு நா.வினோத்குமார், இளநிலை உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில், பணியமர்த்தப்பட்ட நாளான 31.08.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணி நியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அ.சா.எண்.9228/ட்டி.1/ 2020–1, நாள்.01.09.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா. எண்.20479/ஜி1/2020, நாள் 04.09. 2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை –2.
திரு நா.வினோத்குமார் , இளநிலை உதவியாளர்.
(தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை,
மதுரை மண்டலம், மதுரை –2 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை, சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை –18.

<u>நகல்:</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை/
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

18.9.20